## சுருக்கம்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் – 2020–2021–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – கலைச்சொல்லாக்கத்தில் சிறந்து விளங்கும் கல்லூரி மாணவர்களுக்கு மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 37 பேருக்குச் 'சொல்லின் தாய் விருது' மற்றும் தகுதியுரையினைத் 'தமிழ் அகராதியியல் நாள்' விழாவில் வழங்குவதற்கு தொடர் செலவினமாக ரூ.3,70,000/- நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ2-2)த் துறை

அரசாணை (நிலை) எண்.32

நாள் 22.02.2021
சார்வரி, மாசி -10
திருவள்ளுவர் ஆண்டு - 2052

படிக்க:–

1. 2020-2021–ஆம் ஆண்டுக்கான சட்டப்பேரவை அறிவிப்பு நாள் 24.03.2020.
2. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநரின் கடித எண்.371/2020, நாள் 13.5.2020 மற்றும் 07.01.2021.

========

ஆணை:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 24.03.2020 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறையின் 2020-2021-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண்.46–இல், மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு) அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

> "கலைச்சொல்லாக்கத்தில் சிறந்து விளங்கும் கல்லூரி மாணவர்களைப் பாராட்டும் வகையில் சொல்லின்தாய் என்ற பெயரில் புதியதாக விருது தோற்றுவித்து அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் வழங்கப்படும். மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 37 மாவட்டத்திற்கு மாணவர்களைத் தெரிவுசெய்து தமிழ் அகராதியியல் நாள் விழாவின் போது சொல்லின்தாய் விருது வழங்கிச் சிறப்பிக்கப்படுவர். விருது பெறுபவருக்கு விருதுத் தொகையாக ரூபாய் பத்தாயிரம் மற்றும் தகுதியுரை வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 3 இலட்சத்து 70 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்."

[த.பி.பா]

2. மேற்காணும் அறிவிப்பினை செயற்படுத்துவது தொடர்பாக, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், காலத்திற்கேற்ப புதிய கலைச்சொற்களை உருவாக்கி இணைத்தலும், தமிழின் சொல்வளத்தைப் பெருக்குவதுமே 'சொற்குவை' திட்டத்தின் முதன்மை நோக்கம் எனவும், இளைய தலைமுறையினரான கல்லூரி மாணவர்களின் ஒத்துழைப்போடு முன்னெடுக்கும்போதுதான் 'சொற்குவை' முழு வெற்றியடையும் எனவும், அதன்பொருட்டுதான், இவ்வியக்ககத்தின் சார்பில் மாதந்தோறும் ஒரு கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் 'சொற்குவை' அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டு, மாணவர்களுக்குச் சொல்லாக்கப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகவும் மேலும், 'சொல் உண்டியல்' மூலம் மாணவர்கள் வழங்கும் கலைச்சொற்கள் பெறப்பட்டு, அவற்றுள் சிறந்த கலைச்சொற்களை வழங்கும் 3 மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், கலைச்சொல்லாக்கத்தில் சிறந்து விளங்கும் கல்லூரி மாணவர்களில் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 37 பேரைத் தேர்ந்தெடுத்து, 'தமிழ் அகராதியியல் நாள்' விழாவின்போது 37 பேருக்கும் தகுதியுரை மற்றும் 'சொல்லின் தாய்' எனும் விருதினையும் விருதுத் தொகையாக ரூ.10,000/- வீதம் [ரூ.10,000 X 37 மாணவர்கள் (மாவட்டத்திற்கு ஒருவர்)] மொத்தம் ரூ.3.70 இலட்சம் வழங்குவதற்கு, பின்வரும் வகையிலமைந்த செலவினத்தில் இவ்விருதுகளை 37 மாவட்டங்களிலிருந்தும் கல்லூரி மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, இந்த அறிவிப்பினைச் செயற்படுத்திட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் கருதுவதாகவும் தெரிவித்துள்ளார் :–

| வ. எண். | செலவின விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | மாவட்டத்திற்கு ஒரு கல்லூரி மாணவர் வீதம் 37 மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு விருதுத் தொகை ரூ.10,000/- வீதம் வழங்குதல் ரூ.10,000/- X 37 மாணவர்கள் | 3,70,000/- |
| | **மொத்தம்** | **3,70,000/-** |

(ரூபாய் மூன்று இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்)

4. மேலும், 'சொல்லின் தாய்' விருதினை 37 மாவட்டங்களிலிருந்தும், மாவட்டத்திற்கு ஒரு கல்லூரி மாணவர் என்ற வகையில், கல்லூரி கல்வி இயக்ககத்தோடு இணைந்து தகுதியானவரைத் தேர்ந்தெடுத்து விருதுத் தொகை மற்றும் தகுதியுரையினைத் 'தமிழ் அகராதியியல் நாள் விழா'வில் வழங்க இசைவளித்தும், இதற்கான செலவினத் தொகை ரூ.3,70,000/-ஐ (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) 2020-2021–ஆம் நிதியாண்டு முதல் தொடரும் செலவினத்தின்கீழ் நிதியொதுக்கீடு செய்தும், கல்லூரி மாணவர்களைக் கல்லூரிக் கல்வி இயக்ககம்

வாயிலாகத் தேர்ந்தெடுப்பதற்கு அவ்வியக்கக இயக்குநர் அவர்களுக்கு அரசு நிலையில் உரிய அறிவுரைகளை வழங்கியும், மேற்கூறியவாறு செலவினம் மேற்கொள்ள அகரமுதலித் திட்ட இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கி தக்க ஆணை பிறப்பிக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

5. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநரின் கருத்துருவின் அடிப்படையில், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் கலைச்சொல்லாக்கத்தில் சிறந்து விளங்கும் கல்லூரி மாணவர்களில் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 37 பேரைத் தேர்ந்தெடுத்து, 'தமிழ் அகராதியியல் நாள்' விழாவின்போது 37 பேருக்கும் தகுதியுரை மற்றும் 'சொல்லின் தாய்' எனும் விருதினையும் விருதுத் தொகையாக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வீதம் [ரூ.10,000 x 37 மாணவர்கள் (மாவட்டத்திற்கு ஒருவர்)] வழங்குவதற்கென தொடர் செலவினமாக ஆண்டுதோறும் மொத்தம் ரூ.3,70,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் மற்றும் கல்லூரி மாணவர்களைக் கல்லூரிக் கல்வி இயக்ககம் வாயிலாகத் தேர்ந்தெடுப்பதற்கு கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அரசு நிலையில் உரிய அறிவுரைகளை வழங்கியும் ஆணை வெளியிடப்படுகிறது.

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2202 பொதுக் கல்வி – 05 மொழிவளர்ச்சி – 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – AB தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் 359 பரிசுகளும் வெகுமதிகளும் – 01பரிசுகளும் வெகுமதிகளும்"
IFHRMS (த.தொ.கு. 2202 05 001 AB 35901)
OLD (த.தொ.கு. 2202 05 001AB 5900)

7. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம் ரூ.3,70,000/- 2020-2021–ஆம் நிதி ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1 அலுவலகத்திலிருந்து முன்பணமாக பெற்று வழங்கிட இயக்குநர், செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2020–2021–ஆம் நிதியாண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி(தவ(ம)செ)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.7802/நிதி(தவ(ம)செ)/2021, நாள் 20.02.2021–இன் வாயிலாக பெறப்பட்ட இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1848 (ஓர் ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தெட்டு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர்,
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சென்னை.
இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.

நகல்:
மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (உயர்கல்வி மற்றும் வேளாண்மை)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர்,
உயர்கல்வித் துறை, சென்னை–9.
நிதி(தவ(ம)செ/வ.செ.பொ.II/வ.வ.I)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

24/2/21
பிரிவு அலுவலர்.

24/2/2021